## மார்ச் - 3

**"நீதியுள்ளவைகள் எவைகளோ, அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்"**
**- பிலி 4 : 8**

நம்முடைய மனதை அநீதியின் போக்கிலே செல்ல நாம் அனுமதிக்கக் கூடாது. இந்த நீதியின் சோதனையை நம்முடைய ஒவ்வொரு எண்ணத்திலும், வார்த்தையிலும், கிரியையிலும், பிரயோகிக்க கற்றுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அதே சமயத்தில் நியாயமான வரை, மற்றவர்களுடைய நடத்தையை, வித்தியாசமான ஒரு நோக்குடன் அதாவது, இரக்கத்தின், மன்னிப்பின், அநுதாபத்தின், உதவியின், நோக்குடன் பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால் வார்த்தையின் எந்த அர்த்தத்திலாவது, நீதியின் வழிகள், நமது இருதயத்தின் அனுமதியுடன் நம்மால் மீறப்படாமல், நம் மனதில் ஏற்படும் ஒவ்வொரு எண்ணத்திலும், நாம் பக்குவமாக்கும் ஒவ்வொரு ஏற்பாட்டிலும் எப்படி பிழைகளை கண்டுபிடிக்கலாம் என்பதில் மிகவும் கவனமுள்ளவர்களாயிருக்க முடியாதவர்களாயிருக்கிறோம்.

**-Z ’03, 9 (R 3129).**

நமக்குச் செய்யப்படுகிற நன்மைகளுக்காக நன்றியுடன் நாம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கும் நல்மனதே நீதி. நமது குணங்களில் அதன் அபிவிருத்திக்காக, நமது ஜீவியத்தின் எல்லா காரியங்களிலும், தேவனுக்கும், மனிதனுக்கும், நமக்கிருக்கும் கடமையின் எண்ணத்தை நமது இருதயத்தில் பேணி வைத்திருக்க வேண்டும். இந்த விதமாக நீதியின் காரியங்களின் மேல் கவனமுள்ளவர்களாக இருத்தல், கிறிஸ்தவ குணத்தின் அஸ்திபாரமான நீதியே தேவனுடைய குணத்தின் அஸ்திபாரமாகவும் தேவனுடைய சிங்காசனத்தின் அஸ்திபாரமாகவும் இருக்கிறது.

**-P ’32, 30.**

**ஒத்த வாக்கியங்கள்:-**

யாத் 23:1-3, 6-8; லேவி 19:13-15; எஸ்றா7:26; சங் 82:2-4; 89:14; நீதி 17:15; பிர 3:16,17; ஏசா 1:17; 59:14; சக 8:16; மத் 5:23,24; யோவா 7:24.

**கோபுர வாசிப்பு** : Z ’04, 21 (R 3304).

**வினாக்கள்** : இந்த வாரத்தில் நான் நீதியான காரியங்களைப் பற்றி நினைத்தேனா? இல்லையா? எப்படி? ஏன்? பலன் என்ன?